# இயல்பு கூட்டப் பொருட்கள்

1. இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016–ன் கீழ் இயற்றப்பட்டுள்ள உபவிதிகள் மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.423, நாள். 31.03.2017–ன் படியும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்படுத்துவதற்கான சேவை கட்டணம் மற்றும் அபராத கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. அரசிதழில் பிரசுரம் செய்யும் வகைக்கு ரூ.8,400/– அரசு கிளை அச்சகம் மதுரைக்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு தொகை செலுத்த அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 4293/2017/எச்1

**தீர்மானம் எண்: 563 – அங்கீகரிக்கப்பட்டது**

2. நாகர்கோவில் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்காணும் வாகனஙகளுக்கு 2017–2018–ம் ஆண்டிற்கான வாகன வரி, காப்பீட்டு கட்டணம், தகுதி சான்று கட்டணம் மற்றும் ஏனைய பிற கட்டணஙகள் செலுத்த உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சம் ஆகும் அங்கீகாரத்திற்காக.

| | | | |
|---|---|---|---|
| 1) | TN74M 3116 | 8) | TN74L 5167 |
| 2) | TN74S 9273 | 9) | TN74K 9581 |
| 3) | TN74S 9338 | 10) | TN74D 0199 |
| 4) | TN74L 5163 | 11) | TN74AC 8029 |
| 5) | TN74L 5160 | 12) | TN74AC 8049 |
| 6) | TN74L 5166 | 13) | TN74Q 0299 |
| 7) | TN74L 5137 | 14) | JS 200 பொக்லைன் |

கோப்பு எண். 6069/2017/எச்2

**தீர்மானம் எண்: 564 – அங்கீகரிக்கப்பட்டது**

3. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு யானைக்கால் நோய் தடுப்பு பிரிவு நகராட்சிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் கொசு ஒழிப்பு பணிக்காக உபயோகப்படுத்தும் மருந்துகள் 2017–2018 ஆம் ஆண்டிற்கு வாஙக உத்தேச செலவு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். மேற்படி மருந்தினை அரசு அஙகீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாஙகவும் மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 6251/2017/எச்2

**தீர்மானம் எண்: 565 – அங்கீகரிக்கப்பட்டது**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் வண்டல் மண் மற்றும் சகதிகளை அகற்றி அப்புறப்படுத்தி அணையில் பூஙகா வளாகத்தில் சேகரித்து வைக்கும் பணிக்கு 05.05.2017 அன்று நடைபெற்ற E-Tender மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1 | திரு. மத்தியாஸ்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,770.75) |
| 2 | திரு. பால்நேசமணி<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,770.75) |
| 3 | திரு. ஒய்.ஜெயசிங<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,10,771.95) |
| 4 | திரு. கைலாஷ்குமார்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,772.95) |
| 5 | திரு. ஆர்.குமார்<br>ஓப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,773.02) |
| 6 | திரு. எம். வெற்றிவேலன்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,783.36) |
| 7 | திரு. ற்றி. அசோக்குமார்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,783.45) |
| 8 | திரு. எம். மரியஜாண்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,791.69) |
| 9 | திரு. ஜெஸ்கின்ஸ்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,01,793.48) |
| 10 | திருமதி. ஜானகி | (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தக்காரர் | (ரூ.17,01,854.36) |
| 11 | திரு. ஆர். ஜெயக்குமார்<br>ஒப்பந்தக்காரர் | (–) 24.90% மதிப்பீட்டைவிட குறைவு<br>(ரூ.17,03,926.18) |

வரப்பெற்றுள்ள 11 ஒப்பந்தப்புள்ளிகளில் 1. மத்தியாஸ் மதிப்பீட்டைவிட (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.17,01,770.75) 2. திரு. பால்நேசமணி (–) 24.99% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ.17,01,770.75) கொடுத்துள்ளார். இரண்டு ஒப்பந்தக்காரர்களும் ஒரே விகிதம் மற்றும் மதிப்பீடு ஒப்பந்தப்புள்ளி ஒரே விலையில் இருப்பதாலும் நகராட்சி பொறியாளர் கையேடு பக்கம் எண்.8–ல் வரிசை எண். 2, 7, 6–ன் படி நீக்கம் செய்துவிட்டு அதற்கு அடுத்தபடியாக உள்ள ஒப்பந்தக்காரர் திரு. ஒய். ஜெயசிங (–) 24.99% (ரூ.17,01,771.95) மதிப்பீட்டைவிட கூடுதல் கொடுத்துள்ளார். அவரது விலைபுள்ளியை ஏற்று கூடுதல் வைப்பு தொகையாக ரூ.2,99,880/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙகலாம். மேலும் குடிநீர் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழஙகியதை அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண்.17/17–18/இ2

**தீர்மானம் எண்: 566 – அங்கீகரிக்கப்பட்டது**

5. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கழிவு நீர் வாகனம் TN74D0199–க்கு Clutch Assembly பழுதடைந்துள்ளது. எனவே புதிதாக Clutch Assembly பொருத்துவதற்கான உத்தேச செலவு தொகை ரூ.17,000/–க்கு அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண்.20366/2016/H2

**தீர்மானம் எண்: 567 – அங்கீகரிக்கப்பட்டது**

6. 2017–2018 ஆண்டுக்கு திட்டப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செலவினம் மற்றும் இ3 இருக்கையில் இதர விளம்பர செலவினஙகள் வகைக்கு ஒரு வருட விளம்பர கட்டணம் செலவு உத்தேசமாக ரூ.15,00,000/– இலட்சத்திற்கு பொது நிதியில் செலவு மேற்கொள்ள அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண். 22185/16/E3

**தீர்மானம் எண்: 568 – அங்கீகரிக்கப்பட்டது**

7. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.42, கதவு எண்.186/17, ராஜாக்கமஙகலம் ரோடு , வரிவிதிப்பு எண்.34888, வரிவிதிப்பு பெயர். G.தஙகராஜ் என்பவரின் கட்டிடத்திற்கு 2008–2009 I அரையாண்டு பொது சீராய்வின் போது அதிகமாக வரிஉயர்வு செய்யப்பட்டதை ஆட்சேபித்து வழக்கு எண்.144/13–ல் தொடுத்த வழக்கிற்கு 1–வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு மக்கள் நீதிமன்றத்திற்கு சமரசம் மூலம் முடிவு மாறுதல் செய்யப்பட்டு 09.03.2017–ல் தீர்ப்பில் 2008–2009 I அரையாண்டு சீராய்வின் போது தொழில் கூடத்திற்கு 100% சீராய்வு செய்வதற்கு பதிலாக வணிக

பயன்பாட்டில் அடிப்படையில் 150% சீராய்வு செய்ததை மாற்றம் செய்து மேற்படியாரின் தொழில் கூட கட்டிடத்திற்கு 100% 2008–2009 I அரையாண்டு முதல் சீராய்வு செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட 1– வது கூடுதல் நீதிமன்ற வழக்கின் மக்கள் நீதிமன்ற தீர்ப்பின் படி பொது சொத்து வரி சீராய்வில் சொத்துவரி உயர்வு செய்ததை கீழ்க்கண்ட விபரப்படி மாற்றம் செய்து 2008–2009 I அரையாண்டு முதல் நிர்ணயம் செய்து வழஙகிட அஙகீகாரத்திற்காக.

| கதவு எண் | வரிவிதிப்பு எண் | வரிவிதிப்பு பெயர் | 2007–2008 II அரையாண்டு ரூ. | 2008–2009 I சொத்துவரி சீராய்வு 150% | நீதிமன்ற உத்தரவு படி 2008–2009 I 100%பொது சீராய்வு |
|---|---|---|---|---|---|
| 186/7 | 34888 | G.தஙகராஜ் | 3620 | 9050 | 7240 |

கோப்பு எண்.12276/13/எ9

**தீர்மானம் எண்: 569 – அஙகீகரிக்கப்பட்டது**

8. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறுபவர்களுக்கு துணையாக இருக்கும் உறவினர்களுக்கு ஓய்வு எடுக்க ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் Special Shelter மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்திற்கு பணி செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்.38038/2013/UPA2, நாள்:30.01.2017–ன் படி ரூ.100.00 இலட்சம் நகராட்சி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தீர்மானம் எண்: 158, நாள்:31.01.2017–ன் மன்றம் அஙகீகாரம் பெறப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை முதன்மை பொறியாளர் அவர்களின் செ.மு.ஆணை எண்.2829/2016/DO2 நாள்:11.04.2017–ன் படி மதிப்பீடு எண்: 1/2017–18(CE)–ன் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 09.05.2017–ல் ஒப்பந்தப்பள்ளி (E-Tender) கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளியின் தகுதி ஆய்வு பட்டியல் கீழ்வருமாறு.

1. திரு. M.வெற்றிவேலன்,
   பெருவிளை.
2. True Waves Association,
   Madurai.
3. திரு.ஜோசப் அருள்ராஜ்,
   நாகர்கோவில்.
4. திரு. M.முருகதாஸ்,
   பெருவிளை

மேற்படி வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதி ஆய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்.1–ல் வெற்றிவேலன் ஒப்பந்தக்காரர் எல்லா ஆவணஙகளையும்

சமர்ப்பித்துள்ளார். Qualification Criteria படி தகுதியுடையவர் ஆவார். வரிசை எண்.2– True Waves Associates Qualification Criteria படி 5 வருட வேலை செய்த விபரப்பட்டியல் (Experience Certificate) சமர்ப்பிக்கவில்லை. அதனால் தகுதியில்லாதவர் ஆவார். வரிசை எண்.3 – திரு. வி.ஜோசப் அருள்ராஜ் Qualification Criteria படி ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளதன் படி I^st^ Class முதல் வகுப்பு சான்று இல்லை. ஐந்து வருட வேலை செய்த Experience Certificate இல்லை. மற்றும் ஒரே வேலையில் 50% மதிப்பீட்டிற்கு வேலை செய்யவில்லை. அதனால் தகுதியில்லாதவர் ஆவார். வரிசை எண்.4– திரு. M.முருகதாஸ், ஒப்பந்ததாரர் Qualification Criteria படி ஆவணங்கள் சமர்ப்பித்துள்ள படி ஒப்பந்ததாரர் உரிமம் புதுப்பித்தல் இல்லை. ஐந்து வருட வேலை செய்த விபர சான்று இல்லை. ஒரே வேலையில் 50% மதிப்பீட்டிற்கு வேலை செய்த பட்டியல் சமர்ப்பிக்கவில்லை. அதனால் தகுதியில்லாதவர் ஆவார்.

திரு. M.வெற்றிவேலன், Qualification Criteria படி எல்லா ஆவணங்களும் சமர்ப்பித்து தகுதியுடையவராக இருப்பதால் Price Bid திறக்கப்பட்டது விபரம் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு. M.வெற்றிவேலன் ஒப்பந்தக்காரர் | (–) 1.44% மதிப்பீட்டை விட குறைவு (ரூ.9789863.00) |

மேற்படி Price Bid படி ஒப்பந்தக்காரர் திரு. M.வெற்றிவேலன் மதிப்பீட்டை விட குறைவு கொடுத்துள்ளார். அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.15803/16/இ3

**தீர்மானம் எண்: 570 – அங்கீகரிக்கப்பட்டது**

9. மத்திய அரசின் நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் (NULM) நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட இந்துக்கல்லூரி அருகாமையில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான 'அனாதைமடம்' பகுதி வளாகத்தில் அமையவுள்ள வீடற்றோர்களுக்கான உறைவிடம் மற்றும் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆசாரிப்பள்ளம் நாகர்கோவில் என்ற முகவரியில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் உடனிருந்து கவனித்துவரும் நபர்கள் தங்குவதற்கு ஏதுவாக அமையவுள்ள உறைவிடத்திலும் தங்கும் பயனாளிகளுக்கு அரசின் விதிமுறைப்படி உரிய வசதிகள் செய்து கொடுக்க விருப்பம் தெரிவித்து (5) விண்ணப்பங்கள் (Expression of Interest) பெறப்பட்டன. அவற்றின் விபரம் பின் வருமாறு

(1) சார்தீப், நாகர்கோவில் (2) சேவாபாரதி தென்தமிழ்நாடு, இரணியல் (3) ரோஜாவனம், நாகர்கோவில் (4) பெட் கிராட், மதுரை (5) மேரி ஜீசஸ் சோசியல் வெல்ஃபேர் டிரஸ்ட்

அனுபவத்தின் அடிப்படையிலும், உள்ளூர் நிறுவனம் என்பதாலும் சமுதாய அமைப்பாளர்களின் அறிக்கையின் பேரிலும், சேவா பாரதி, தென் தமிழ்நாடு இரணியல் என்ற தொண்டு நிறுவனத்தை 'அனாதைமடம்' பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடற்றோர்களுக்கான தங்குமிடத்தை நடத்துவதற்கும் அரசு நிபந்தனைகளுக்குட்பட்டு பணி செய்ய பணி உத்தரவு வழங்கலாம்.

கோப்பு எண்.20589/2015/எச்6

**தீர்மானம் எண்: 571 – அங்கீகரிக்கப்பட்டது**

**10.** நாகர்கோவில் நகராட்சி கணினி பிரிவு web-based centralized software அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணினி மற்றும் கணினி உபகரணங்கள் புதிதாக வாங்கி பயன்படுத்த தேவைப்படும் கணினி பிரிண்டர் மற்றும் கணினி உபகரணங்கள் விபரம் குறிப்பிட்டு உத்தேச மதிப்பீடு ரூ.13,00,000/– ற்கு வாங்க மன்ற தீர்மான எண்.299, நாள்:28.02.2017–ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

web-based centralized software அடிப்படையில் தற்போதைய தேவையை கருதி ELCOT-லிருந்து பெறப்பட்ட 23.05.2017 தேதிய விலைப்பட்டியல் மற்றும் கணினி உபகரணங்கள், கணினி விபரம் கீழ்வருமாறு.

| S.No | Description | Unit Price (Rs) | Qty | Total (Rs) |
|---|---|---|---|---|
| 1 | கணினிகள் i7 | 51,500 | 5 | 2,57,500 |
| 2 | கணினிகள் i5 | 35,200 | 7 | 2,46,400 |
| 3 | Dot Matrix Printer | 10,350 | 7 | 72,450 |
| 4 | Scan @ Printer | 12,750 | 8 | 1,02,000 |
| 5 | CAT 6 Cable | 16.51 | 610 Mtrs | 10,071 |
| 6 | Switch -16 port | 4,000 | 4 | 16,000 |
| 7 | Switch -24 port | 4,900 | 4 | 19,600 |
| 8 | 42AH SMF Battery | 2,930 | 40 | 1,17,200 |
| 9 | Installation charges for 2.0 KVA online UPS | 200 | 12 | 2,400 |
| 10 | 5KVA online UPS 120 minutes back up | 1,37,200 | 2 | 2,74,400 |
| 11 | Installation charges for 5KVA online UPS | 800 | 2 | 1,600 |
| 12 | Installation charges for Bio-metric Finger Printer Scanner optical /RF | 345 | 5 | 1,725 |
| 13 | Bio-metric Device | 4,255 | 5 | 21,275 |
| 14 | Anti Virus | 1,100 | 30 | 33,000 |
| | Total<br>(Including service tax, Advertisement tax, VAT உட்பட) | | (+) | 11,75,621.10<br>1,12,175.72<br>12,87,797 |

விற்பனை வரி 01.07.2017 முதல் மத்திய அரசால் GST வரி புதிதாக அமுல்படுத்த இருப்பதால், தேவையை கருதி உடனடியாக மேற்படி மதிப்பீட்டுக்கு ELCOT மூலம் கணினி, கணினி உபகரணங்கள் வாங்கவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 3841/2016/இ3

**தீர்மானம் எண்: 572 – அங்கீகரிக்கப்பட்டது**

**11.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி கொண்டிருக்கும் TN74 M3116 JCB –க்கு Cutterkit, Hose, Sealkit, Wearpad, Hydranlicoil 20 litres மற்றும் உதிரிபாகங்கள் பழுது ஏற்பட்டிருப்பதால் அதனை மாற்றி புதியது பொருத்துவதற்கான உத்தேச செலவு தொகை ரூ.60,000/– ஆகும். எனவே அங்கீகரிக்கப்பட்ட வாகனம் தயாரிப்பு நிறுவனமான ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ் ஏஜென்சி சர்வீஸ் சென்டரில் பணி மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 17975/2016/எச்2

**தீர்மானம் எண்: 573 – அங்கீகரிக்கப்பட்டது**

**12.** அடல் நகரிய சீர்திருத்தம் மற்றும் வளர்ச்சி இயக்கம் AMRUT 2016–2017 –ன் கீழ் வார்டு 49–ல் ஜீவா நகர் நகராட்சி பூங்காவினை குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் கூடிய அழகுபடுத்துதல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.22.94 இலட்சத்திற்கு கீழ்கண்ட விபரப்படி நிதி அனுமதி TUFIDCO / AMRUT/ 1953/AM (M) 2017 நாள். 17.02.2017 –ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

| **Funding Pattern (Rs. In Lakhs)** | | | |
|---|---|---|---|
| **GO I-Shane 50%** | **GOTN – Shane 20%** | **ULB Shane 30%** | **Total** |
| 11.47 | 4.59 | 6.88 | 22.94 |

மன்ற தீர்மானம் எண் 409 நாள். 31.03.2017–ன் படி மேற்படி நிதி விபரம் அங்கீகரிக்கப்பட்டதன்படி மதிப்பீட்டு எண் 35/2017–2018–ன் படி 12.05.2017–ல் E-Tender படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததார் பெயர் | குறைவு % | குறைவு தொகை விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு. ற்றி. மத்தியாஸ் | (–) 20.50% | ரூ.1787754.06 |
| 2 | திரு. எம். வெற்றிவேலன் | (–) 15.00% | ரூ.1911435.80 |
| 3 | திரு. கே. மணிகண்டன் | (–) 14.81% | ரூ.1915640.00 |
| 4 | திரு. பி. முரளீதரன் | (–) 10.00% | ரூ.2023872.52 |

மேற்படி வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.ற்றி. மத்தியாஸ் (–) 20.50% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். எனவே கூடுதல் வைப்பு தொகையாக ரூ.2,35,135/– செலுத்திய பின்னர் வேலை உத்திரவு வழஙக அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 22185/2015/இ3

**தீர்மானம் எண்: 574 – அங்கீகரிக்கப்பட்டது**

13. அடல் நகரிய சீர்திருத்தம் மற்றும் வளர்ச்சி இயக்கம் AMRUT 2016–2017 –ன் கீழ் வார்டு 19–ல் பிரியா நகர் நகராட்சி விளையாட்டு பூஙகாவை அழகுபடுத்துதல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.13.79 இலட்சத்திற்கு கீழ்கண்ட விபரப்படி நிதி அனுமதி TUFIDCO / AMRUT/ 1953/AM (M) 2017 நாள். 17.02.2017 –ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

| **Funding Pattern (Rs. In Lakhs)** | | | |
|---|---|---|---|
| **GO I-Shane 50%** | **GOTN – Shane 20%** | **ULB Shane 30%** | **Total** |
| 6.90 | 2.76 | 4.13 | 13.79 |

மன்ற தீர்மானம் எண் 409 நாள். 31.03.2017–ன் படி மேற்படி நிதி விபரம் அங்கீகரிக்கப்பட்டதன்படி மதிப்பீட்டு எண் 36/2017–2018–ன் படி 12.05.2017–ல் E-Tender படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததார் பெயர் | குறைவு % | குறைவு தொகை விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு. ற்றி. மத்தியாஸ்<br>ஒப்பந்தக்காரர் | (–) 20.00% | ரூ.1078278.19 |
| 2 | திரு. எம். வெற்றிவேலன்<br>ஒப்பந்தக்காரர் | (–) 15.00% | ரூ.1145675.00 |
| 3 | திரு. கே. மணிகண்டன் | (–) 12.01% | ரூ.1185971.23 |
| 4 | திரு. எஸ்.செல்வம் | (–) 4.00% | ரூ.1292933.83 |

மேற்படி வரப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.ற்றி. மத்தியாஸ் (–) 20.00% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். எனவே கூடுதல் வைப்பு தொகையாக ரூ.1,37,900/– யை செலுத்திய பின்னர் வேலை உத்திரவு வழஙக அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 22185/2015/இ3

**தீர்மானம் எண்: 575 – அங்கீகரிக்கப்பட்டது**

14. அடல் நகரிய சீர்திருத்தம் மற்றும் வளர்ச்சி இயக்கம் AMRUT 2016–2017 –ன் கீழ் வார்டு 49–ல் நாஞ்சில் நகர் நகராட்சி பூஙகாவினை குழந்தைகள் விளையாட்டு உபகரணஙகளுடன் அழகுபடுத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.23.98 இலட்சத்திற்கு கீழ்கண்ட விபரப்படி நிதி அனுமதி TUFIDCO/AMRUT/1953/AM(M)2017 நாள்.17.02.2017–ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

| **Funding Pattern (Rs. In Lakhs)** | | | |
|---|---|---|---|
| **GO I-Shane 50%** | **GOTN – Shane 20%** | **ULB Shane 30%** | **Total** |
| 11.99 | 4.80 | 7.19 | 23.98 |

மன்ற தீர்மானம் எண் 409 நாள். 31.03.2017–ன் படி மேற்படி நிதி விபரம் அங்கீகரிக்கப்பட்டதன்படி மதிப்பீட்டு எண் 34/2017–2018–ன் படி 12.05.2017–ல் E-Tender படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததார் பெயர் | குறைவு % | குறைவு தொகை விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு. ற்றி. மத்தியாஸ் | (–) 21.00% | ரூ.1684353.33 |
| 2 | திரு. எம். வெற்றிவேலன் | (–) 15.00% | ரூ.1812280.00 |
| 3 | திரு. பி. தஙகசாமி | (–) 14.99% | ரூ.1812406.82 |

மேற்படி வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தக்காரர் திரு.ற்றி. மத்தியாஸ் (–) 21.00% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். எனவே கூடுதல் வைப்பு தொகையாக ரூ.2,51,790/– யை செலுத்திய பின்னர் வேலை உத்திரவு வழஙக அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 22185/2015/இ3

**தீர்மானம் எண்: 576 – அங்கீகரிக்கப்பட்டது**

15. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட டென்னிசன் சாலை மற்றும் பாலமோர் ரோடு சந்திப்பு பகுதி விரிவாக்கம் செய்ய ஏதுவாக மேற்கண்ட பகுதியில் புல எண் E12/35 –ல் 498.75 சதுர அடியும் புல எண் E12/36 –ல் 146.20 சதுர அடியும் மொத்தம் 644.95 சதுர அடி (1.48 சென்ட்) இடத்தை நகராட்சிக்கு தானமாக வழஙக அதன் உரிமையாளர் திரு.N.திலக் என்பவர் மனு செய்துள்ளார். மேற்படி இடத்தை தானமாக பெற அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 27363/1991/எப்1

**தீர்மானம் எண்: 577 – அங்கீகரிக்கப்பட்டது**

**16.** நாகர்கோவில் நகராட்சியில் வார்டு எண்.48–ல் நவீன முறையில் சரலூார் மீன் சந்தையில் புதியதாக கடைகள் கட்டுதல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை முதன்மை பொறியாளர் அவர்களின் தொழிற்நுட்ப அனுமதி ஆணை எண்.18281/2016/DO1 நாள் 22.03.2017–ன் படி மதிப்பீடு எண்.273/2016–17 CE மதிப்பீட்டு தொகை ரூ.81.88 இலட்சத்திற்கு 20/04/2017 தேதியில் E-Tender முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| 1. Gelind Tech Consultant<br>3-1st Street. Indira Nager,<br>Medical College Road,<br>Thanjavur. | Qualification Criteria படி S.No.2,4,5,6,7,11,12,13 –ன் படி சான்று (Certificate) சமர்ப்பிக்காததால் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. |
| 2. Thiru. M.Vettivelan,<br>3/51, Muruga Bhavanam,<br>Peruvillai, Nagercoil. | (–) 4.99% மதிப்பீட்டை விட குறைவு.<br>(ரூ.70,58,999.00) |

மேற்படி வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் Gelind Tech Consultant அவர்கள் Qualification Criteria படி Certificate சமர்ப்பிக்காததால் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. வரிசை எண்.2–ல் ஒப்பந்தக்காரர் திரு.M.வெற்றிவேலன் (–) 4.99% (ரூ.70,58,999.00) மதிப்பீட்டை விட குறைவு கொடுத்துள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.19687/E3/2012

**தீர்மானம் எண்: 578 – அங்கீகரிக்கப்பட்டது**

**17.** நாகர்கோவில் நகராட்சியில் பொருத்தப்பட்டுள்ள Air Conditioner வருடாந்திர பராமரிப்பு பணி 15.03.2013–ல் மேற்கொள்ளப்பட்டது. தற்போது Air Conditioner–ல் தூசிகள் படிந்து பழுது ஏற்பட்டுள்ளதால் வருடாந்திர பராமரிப்பு பணி கீழ்கண்ட இடங்களில் பொருத்தப்பட்ட Air Conditioner பராமரிப்பு பணி மேற்கொள்ள Sanjay Cool Systems & Solutions அவர்களிடமிருந்து Quotation பெறப்பட்டதில் ரூ.3,600/– per unit per annum ஆகும்.

| S.I. No | Place | Ton | Numbers |
|---|---|---|---|
| 1. | Health Officer Cabin | 1 1/2 TR | 1No |
| 2. | Computer Room | 1 1/2 TR | 2No's |
| 3. | Computer Master – Cabin | 1 1/2 TR | 2No's |
| 4. | RO Cabin | 1 1/2 TR | 1No |
| 5. | T.P.O Cabin | 1 1/2 TR | 1No |
| 6. | Municipal Engineer Cabin | 1 1/2 TR | 1No |

| | | | |
|---|---|---|---|
| 7. | Commissioner Cabin | 1 1/2 TR | 1No |
| 8. | Chairman Cabin | 1 1/2 TR | 1No |
| 9. | Collection Centre Office | 1 1/2 TR | 3No's |
| 10. | Krishnancoil Collection Centre | 1 1/2 TR | 2No's |
| 11. | கழுதை சந்தை Collection Centre | 1 1/2 TR | 2No's |
| 12. | வட்டவிளை Collection Centre | 1 1/2 TR | 1No |
| 13. | இடலாக்குடி Collection Centre | 1 1/2 TR | 1No |
| 14. | Commissioner Quarters | 1 1/2 TR | 1No |
| | **Total** | 1 1/2 TR | **20 No's** |

மேற்கண்ட விபரப்படி நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டிகளுக்கு (1.5 TK Split A/C) 20 எண்ணங்கள் வருடாந்திர பராமரிப்பு செய்ய Quotation படி, ஒரு எண்ணத்திற்கு ரூ.3600/– வீதம் 20 எண்ணங்களுக்கு ரூ.72,000/– உத்தேச செலவு ஆகும். பொது நிதியில் செலவு மேற்கொள்ள அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.21703/13/E3

**தீர்மானம் எண்: 579 – அங்கீகரிக்கப்பட்டது**

**18.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, கதவு எண் 48B5, வரிவிதிப்பு எண். 2275 கொண்ட கட்டிடத்திற்கு விலக்களிக்க கோரி திரு. ரசல்ராஜ் பக்திநாதன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP (MD) No:. 12767/2010 –ற்கு நகராட்சிக்கு எதிராக சொத்து வரியிலிருந்து விலக்களித்து தீர்ப்பு வழஙகப்பட்டுள்ளது மேலும் மதுரை உயர்நீதிமன்ற கிளை நகராட்சி வழக்கறிஞர் தனது 18.05.2017–ம் தியதிய சட்டக்கருத்துரையில் மேற்படி வழக்கு மேல் முறையீடு செய்ய தகுந்ததுதான் என சட்டக்கருத்துரை வழஙகியுள்ளார்.

எனவே மேற்படி வழக்கினை மேல்முறையீடு செய்யவும் அதற்கான வழக்கு கட்டணம் செலுத்துவதற்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 15154/2010/அ2

**தீர்மானம் எண்: 580 – அங்கீகரிக்கப்பட்டது**

**19.** கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் கடித குறிப்பு ந.க.எண்.ஆ3/4537/2016–1 நாள். 25.03.2017–ன் படி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2016–2017–ன் கீழ் இராஜ்யசபா உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் அவர்களின் பரிந்துரையில் நாகர்கோவில் நகராட்சி வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் அருகில் அம்மா திருமண மண்டபம் அமைக்க ரூ.200.00 லட்சத்திற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ3/4537/2016 நாள். 22.03.2017–ன் படி

நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களது கடிதம் ந.க.எண்.913/2017/திலிம3 நாள். 11.05.2017 –ன் படி கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில் நகரம் வார்டு E-பிளாக் 11–நகர அளவை எண் 2/6 பாகத்தில் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் திருமண மஹால் கட்டிடம் கட்ட வடிவமைப்பு வரைபடம் ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ள அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண். 14494/2016/இ3

**தீர்மானம் எண்: 581 – அஙகீகரிக்கப்பட்டது**

20. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 4, 5, 6 வரிவிதிப்பு எண் 2004304, திருமதி. C.K.சுனிதா என்பவரின் பெயரில் குத்தகை உரிமம் 2015–க்கு பின் நீட்டிக்கப்படவில்லை.

மேற்படி கடையினை மேல் வாடகைக்கு விடப்பட்டுள்ளதால் நகராட்சி 2016–2017 ஆம் ஆண்டின் பொது ஏல அறிக்கை பொது கட்டுபாடு எண் 69–ல் குறிப்பிட்டுள்ளபடி மேற்படி கடையினை மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், விளம்பர செலவினத்திற்கும் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

மேலும் அன்னாரின் உரிமத்தை புதுப்பித்தல் தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அவை அனைத்தும் இதன் மூலம் இரத்து செய்யப்படுகிறது.

கோப்பு எண். 202/2014/அ13

**தீர்மானம் எண்: 582 – அஙகீகரிக்கப்பட்டது**

21. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தினுள் அமைந்துள்ள கழிவறைகளை பொது மக்கள் இலவசமாக பயன்படுத்திடும் பொருட்டு கழிவறைகளை இலவசமாக பராமரித்திடவும், பேருந்து நிலைய வளாகத்தினை 24 மணி நேரமும் சுகாதாரமாக பராமரித்திடும் பொருட்டும் பேருந்து நிலைய வளாகத்தினுள் விளம்பரம் செய்திடும் உரிமம் பொது ஏலம் விட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை எதிர்த்து பேருந்து நிலைய கட்டண கழிவறையின் உரிமதாரர் (01.04.2015 முதல் 31.03.2018 முடிய) திரு.C.விஜயகுமார் என்பவரால் WMP (MD) No.: 7456/2017 in WP (MD) No: 9711/2017 வழக்கின் படி மதுரை உயர்நீதிமன்றக்கிளையில் தடையாணை பெறப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை மதுரை உயர்நீதிமன்றக்கிளையில் வழக்குறைஞர் திரு.P. ஆதிமூலபாண்டியன் அவர்கள் மூலம் நடத்திடவும், வழக்கு செலவினஙகளுக்கும் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 21003/2014/அ14

**தீர்மானம் எண்: 583 – அஙகீகரிக்கப்பட்டது**

**22.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.7760/2016/IT, நாள்.11.05.2017ல் தெரிவித்துள்ளவாறு, தகவல் தொழில்நுட்பம் (Information Technology Service Delivery) இந்நகராட்சியில் கீழ்கண்ட சேவைகள் அனைத்தும் மின்னணு வாயிலாக செயல்படுத்திட தேவையான அறிவிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

## Notification

In the exercise of the powers conferred by sub-rule [1] of rule 5 of the Tamil Nadu Information Technology (Electronic service Delivery] Rules 2016, Commissioner, Nagercoil Municipality, hereby notifies the public services specified in column [2] of the Table below to be the services that can be delivered through electronic mode under the Electronic Service Delivery System and the other relevant particulars as specified in column [3] thereof:

| Sl.No | Name of the public services that can be delivered through Electronic mode | | Designated officer for the delivery of the service |
|---|---|---|---|
| 1. | Property Tax | Make Payment | Revenue Inspector |
| 2. | | New Tax Assessment | |
| 3. | | Property Search | |
| 4. | | View DCB | |
| 5. | | Tax Calculator | |
| 6. | | View Payment History | |
| 7. | | Name Transfer of Property | |
| 8. | | Assessment Enhancement | |
| 9. | | Vacant Land | |
| 10. | Water Charges | Connection Search | Revenue Inspector |
| 11. | | View DCB | |
| 12. | | View Payment History | |
| 13. | | View Connection | |
| 14. | | View Connection History | |
| 15. | | Make Payment | |
| 16. | | Application for New assessment | |

| | | | |
|---|---|---|---|
| 17. | Under Ground Drainage System | Payment for Deposit | Public Works Overseer |
| 18. | | Make Payment | |
| 19. | Profession Tax | Assessment Search | Revenue Inspector |
| 20. | | View DCB | |
| 21. | | View Payment History | |
| 22. | | View Connection | |
| 23. | | View Connection History | |
| 24. | | Make Payment | |
| 25. | Non Tax | Search Non Tax Property | Revenue Inspector |
| 26. | | View DCB | |
| 27. | | View Allotment | |
| 28. | | View Payment History | |
| 29. | | View allotment History | |
| 30. | | Make Payment | |
| 31. | Trade License | Registration of trade License | Sanitary Inspector |
| 32. | | Renewal of License | |
| 33. | | Make payment | |
| 34. | Birth & Death Registration | Printing of Birth Certificate | Sanitary Inspector |
| 35. | | Printing of Death Certificate | |
| 36. | | Birth Certificate correction | |
| 37. | | Death Certificate correction | |
| 38. | | Child name inclusion | |
| 39. | | Request for Birth Correction | |
| 40. | | Request for Death Correction | |
| 41. | | Search Birth Registration | |
| 42. | | Search Death Registration | |
| 43. | Building Plan Approval | Submission of New Application | Town Planning Inspector |
| 44. | | Online submission of Revised Building Plan | |
| 45. | | Make payment | |
| 46. | Grievances | Online Registration of Grievances | Manager |
| 47. | | Status of Complaints/Grievances | |

மேற்படி அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30000/— தொகைக்கு அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண் 3841/E3/2016

**தீர்மானம் எண்: 584 – அங்கீகரிக்கப்பட்டது**

23. TN 74AL 1852 Scorpio வாகனம் ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனத்தின் முன்புறம் இருக்கை (Co driver Seat ) சீர் செய்யவும் மற்றும் வாகன பக்கவாட்டு வர்ணஙகள் புதுப்பிக்கவும் வாகனத்தின் ஐந்தாவது சர்வீஸ் மேற்கொள்ளவும் பணிகள் மேற்கொள்ள வாகன அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் சென்டர் மூலம் பணி மேற்கொள்ள KODAI CARS (P) Ltd. திருநெல்வேலி அவர்களிடமிருந்து Service Quotation பெறப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ள Quotation படி உத்தேச செலவினம் ரூ.49,000/– பொது நிதியில் மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண். 1767/2015/இ3

**தீர்மானம் எண்: 585 – அங்கீகரிக்கப்பட்டது**

24. நாகர்கோவில் நகராட்சி ஆணையாளர் அலுவலக பயன்பாட்டிற்கு ஆணையாளர் அலுவலக Room –ல் கலர் பிரிண்டர் வைப்பதற்கு ஆணையாளர் அறிவுரைபடி M/S ElCOT Chennai நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி (Proforma Invoice No: P1/C20/011/0003/56/2017 –18/650 நாள். 30.05.2017–ன் படி உத்தேச செலவு ரூ.46,000/–க்கு Colour Printer வாஙகவும் பொது நிதியில் செலவு மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக

கோப்பு எண். 3841/2016/இ3

**தீர்மானம் எண்: 586 – அங்கீகரிக்கப்பட்டது**

25. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 49.10 சதுர மீட்டர் 52 வார்டுகள் அடஙகிய இந்நகராட்சியின் மொத்த ஜனத்தொகை 260074 திடக்கழிவு மேலாண்மை சட்டம் விதி 2000–ன் படி (Management and Handling) இந்நகராட்சி பகுதி 52 வார்டுகளிலுள்ள வீடுகள் தோறும் மக்கும் மற்றும் மட்காத திடக்கழிவுகளை சேகரித்து புதிய DPR – ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தெருக்கள் மற்றும் வீதிகளில் உள்ள திடக்கழிவுகளையும் குறிப்பிட்ட இடத்தில் சேகரிக்கப்பட்டு பின் லாறிகள் மூலம் வலம்புரிவிளை நகராட்சி உரக்கிடஙகில் உடனடியாக கொட்டப்பட்டு வருகிறது. 2016–17–ம் ஆண்டிற்கு மேற்படி துப்புரவு பணிகள் சிறப்பாக செய்வதற்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் ( Manpower) பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | தற்போது நகரிலுள்ள 76876 வீடுகளிலிருந்து (Household) பெறப்படும் முதல் நிலை சேகரிப்பான ( primary Collection) மட்கும் மற்றும் மட்காத திடக்கழிவுகள் அரசாணை 101–ன் படி 250 வீடுகளுக்கு 3 துப்புரவு பணியாளர்கள் வீதம் மேற்படி பணி செய்ய தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் (Man power) | துப்புரவு<br>பணியாளர்கள் 923 |
| 2 | நகராட்சியிலுள்ள நான்கு திறந்த நிலை லாறியில் (Open Lorry) பணி செய்ய நான்கு நபர்கள் வீதம் ( அரசாணை 101–ன் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள் –16 |
| 3 | நகராட்சி பகுதிகளிலுள்ள 5 டம்பர்பிளோசருக்கு 1 துப்புரவு | துப்புரவு |

| | | |
|---|---|---|
| | பணியாளர் வீதம் (அரசாணை 101– ன் படி ) தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | பணியாளர்கள் –5 |
| 5 | நகராட்சி பகுதிகளில் ஆட்டோ மூலம் திடக்கழிவுகளை கொண்டு செல்வதற்கு ஆட்டோ ஒன்றுக்கு இருவர் வீதம் புதிய DPR –ன் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள் –54 |
| 6 | 20 பேட்டரி ஆபரேட் வாகனம் ஒருவர் வீதம் புதிய DPR –ன் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள் – 20 |
| 7 | நகராட்சி பகுதிகளில் பயன்படுத்தப்படும் இரண்டு கம்பேக்டர் (Compactor) ஒன்றுக்கு இரண்டு பேர் வீதம் இரண்டு கம்பேக்டருக்கு 2 ஷிப்ட் ( 2 shifts) –க்கு புதிய DPR – ன் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள் – 12 |
| 8 | நகராட்சி வலம்புரிவிளை உரக்கிடஙகில் அனுமதிக்கப்பட்ட (அரசாணை எண்.101 –ன் படி ) 20 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் பணிதொடர்பாக 2 துப்புரவு பணியாளர்கள் வீதம் 120 மெட்ரிக்டன் திடக்கழிவு பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள் – 12 |
| 9 | இரண்டு முதல் நிலை பேருந்து நிலையம் ( A Grade Busstand) சுத்தம் செய்வதற்கு காலை 5.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரையும் , மதியம் 1.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் 2 ஷிப்ட் முறையில் சுத்தம் செய்யும் பணிக்கு (அரசாணை 101–ன் படி ) தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள் – 24 |
| 10 | இரண்டு முதல்நிலை பேருந்து நிலையத்திலுள்ள ஆண் மற்றும் பெண் கழிப்பறையை சுத்தம் செய்ய 2 ஷிப்டு முறையில் பணி செய்ய தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள்<br>ஆண் –4<br>பெண் –4 |
| 11 | நகராட்சி பகுதியிலுள்ள சமுதாய கழிப்பிடம் சுத்தம் செய்ய (Community Toilet) தேவைப்படும் ஆண் மற்றும் பெண் தப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள்<br>ஆண் –8<br>பெண் –8 |

| | | |
|---|---|---|
| 12 | நகராட்சி கழிவுநீர் வாகனத்திற்கு (Sullage Lorry) பணி செய்ய தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் (அரசாணை 101–ன் படி) | துப்புரவு<br>பணியாளர்கள் –2 |
| 13 | நகராட்சி பகுதிகளிலுள்ள சாலைகள் மற்றும் தெருக்களில் தினசரி சுத்தம் செய்வதற்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் | துப்புரவு<br>பணியாளர்கள்<br>ஆண் –12<br>பெண் –12 |
| 14 | Bio Methanation Plant 15–க்கும் (DPR) தேவைப்படும் பணியாளர்கள் | 15 |

ஆக மொத்தம் (அரசாணை 101–ன் படி ) மேற்படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள்

| வரிசை | வாகன விபரம் | ஓட்டுநர் |
|---|---|---|
| 1 | Light Motor (Automodel) Vehicle 25–க்கு ஒருவர் வீதம் புதிய DPR –ன் படி தேவைப்படும் ஓட்டுநர் | 25 |
| 2 | 20 பேட்டரி ஆபரேட் வாகனம் ஒருவர் வீதம் புதிய DPR –ன் படி தேவைப்படும் ஓட்டுநர் | 20 |
| 3 | நகரில் பயன்படுத்தப்படும் இரண்டு கம்பேக்டருக்கு ஒன்றுக்கு இருவர் வீதம் புதிய DPR –ன் படி தேவைப்படும் ஓட்டுநர் | 4 |
| 4 | Decentralised Organic waste Processing plan 20 MT /day 16 x10 | 160 |

தற்போது நகராட்சி 52 வார்டுகளில் தனியார் மூலம் 34 வார்டுகளிலும் நகராட்சி பணியாளர்கள் மூலம் நகராட்சியால் 18 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி நடைபெற்று வருகிறது

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 11.12.2016 உடன் தனியார் ஒப்பந்தம் முடிவடைவதால் மேற்படி பணி தொய்வில்லாமல் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி வாகனங்கள் பெறப்பட்டு தற்போதுள்ள பணியாளர்கள் தவிர்த்து, புதிய DPR – திட்டத்தின்படி வாகனங்கள் வாஙகவும் 373 பணியாளர்கள் மற்றும் 27 ஓட்டுநர்கள் மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்கள் 2016—2017—ம் ஆண்டு விலைவிகிதத்தின்படி திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேற்படி அனைத்து செலவீனங்களுக்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.02221/2016/எச்.1

**தீர்மானம் எண்: 587 — அங்கீகரிக்கப்பட்டது**

**26.** இந்நகராட்சி பகுதியில் 33 வார்டுகளில் தனியார் மூலமும் 19 வார்டு பகுதிகளில் நகராட்சி பணியாளர்கள் மூலமும் திடக்கழிவு மேலாண்மை திட்டபணிகள் நடைபெற்று வந்தது. 11.12.2016—ல் தனியாருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் முடிவடைவதால் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள அரசாணை எண்.101—ன் படி நகராட்சி உட்கட்டமைப்பு மற்றும் வாகனங்கள் அடிப்படையில் 1131 பணியாளர்களுக்கு 333 அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியிடங்கள் நீங்கலாக மீதம் உள்ள 798 பணியாளர்கள் தேவைப்படும் நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு 2012—ம் ஆண்டு 360 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியு அனுமதிக்கப்பட்டது. தற்போது 2016—ம் ஆண்டிற்கு விரிவான திட்ட அறிக்கையில் 25 ஆட்டோ, 2 காம்பேக்டர் , மற்றும் பயோ மெத்தானேசன பிளான்ட் மூலம் குப்பை பிரித்தெடுக்க திட்டம் பெறப்பட்டு 373 பணியாளர்கள் மற்றும் 27 ஒட்டுனர்களும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2016—2017—ம் ஆண்டு விலை விகிதத்தின்படி ரூ.400/— வீதம் ஒரு பணியாளருக்கு நிர்ணயம் செய்து மொத்தம் 400 பணியாளர்கள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி கொள்ள ரூ.822.00 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான செயல்திட்ட கருத்துருவுக்கு முன் இசைவு (Principal Clearance) வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரேரணையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களால் மேலனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இது நாள் வரையிலும் அனுமதி ஏதும் கிடைக்கப்பெறவில்லை. எனவே 12.12.2016 முதல் 31.07.2017 வரை ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் செய்து வரும் நிறுவனத்திற்கே கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய பின்னேற்பு வழங்கிடவும் தொடர்ந்து 01.08.2017 முதல் 400 பணியாளர்கள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி கொள்ளவும் மன்றத்தி அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்.2221/2016/எச்.1

**தீர்மானம் எண்: 588 — அங்கீகரிக்கப்பட்டது**

27. இந்நகராட்சிக்குட்பட்ட சுப்பையார் குளங்கரையில் உள்ள கழிவுநீர் பைப் லைன் உடைந்ததை சரி செய்யவும், பக்க சுவர் சரி செய்து, Filter House –லிருந்து வரும் உபரி நீரை PVC பைப் மூலம் சுப்பையர் குளத்திற்கு கொண்டு வர தீர்மானம் எண்.325 நாள்.31.03.2017—ன் படி ரூ.7,00,000/—க்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணஙக 28.04.2017 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| ஒப்பந்தப்புள்ளி விவரம் | | |
|---|---|---|
| 1 | திரு. ஆர்.குமார்<br>ஒப்பந்ததாரர் | ( 1% D.D. not Submitted) |
| 2 | திரு. ஆர். ஜெயக்குமார்<br>ஒப்பந்ததாரர் | ( 1% D.D. not Submitted) |
| 3 | திரு. எஸ். செல்லம்<br>ஒப்பந்ததாரர் | (– 1 )1.50% மதிப்பீட்டைவிட குறைவு |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.(1,2) 1% முன் வைப்புத் தொகை செலுத்தப்பட்டதால் நீக்கம் செய்யப்பட்டு அதற்கு அடுத்தபடியாக உள்ள திரு.எஸ். செல்லம், ஒப்பந்ததாரர் (–) 1.50% மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ளதால் அதனை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.3871/2017/இ1

**தீர்மானம் எண்: 589 – அங்கீகரிக்கப்பட்டது**

28. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் பயனாளிகளை கண்டறிவதற்கு ஏதுவாக N.G.O மூலம் கணக்கெடுப்பு நடத்தி படிவம் பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் House for All ஆய்வுக் கூட்டம் நாள்:26.08.2016–ல் கூறப்பட்டது. அதன்படி N.G.O க்கள் 1. Fed Cort அதன் தலைவர் சுருளி மற்றும் 2. அதஙகோட்டாசான் முத்தமிழ் கழகம் என இரண்டு நிறுவன மனுக்கள் பெறப்பட்டு Fed Cort நிறுவனத்திற்கு 1 முதல் 26 வார்டுகள் வரையிலும் அதஙகோட்டாசான் முத்தமிழ் கழகம் – 27 முதல் 52வார்டுகள் வரையிலும் HFA சர்வே எடுத்து படிவங்கள் பெற உத்தரவு வழஙகப்பட்டது. அதன்படி 1 முதல் 52 வார்டுகளில் HFA சர்வே நடத்தி படிவஙகள் பெறப்பட்டு அதனை கணினியில் பதிவு செய்து பிரிண்டுகள் மற்றும் C.D க்கள் நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இரண்டு நிறுவனஙகளிடமிருந்து Fed Cort நிறுவன கடிதம் நாள்: 18.10.2016 –ல் ரூ.2,60,000/– வழஙகவும் மற்றும் அதஙகோட்டாசான் நிறுவனம் கடிதம் நாள்:18.10.2016–ல் ரூ. 2,60,000/– வழஙக கூறப்பட்டுள்ளது . அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி Fed Cort நிறுவனத்திற்கு ரூ.2,60,000/– மற்றும் அதஙகோட்டாசான் முத்தமிழ் கழகம் நிறுவனத்திற்கு ரூ.2,60,000/– வழஙகியதை அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண். 6718/2016/எப்1

**தீர்மானம் எண்: 590 – அஙகீகரிக்கப்பட்டது**

29. இந்நகராட்சி பகுதிகளில் இது நாள் வரை பிரகடனப்படுத்தாத பூஙகா விளையாடுமிடம் மற்றும் திறவிடஙகளை பிரகடனப்படுத்த நகரமைப்பு ஆய்வர்களால் சமர்பிக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் பூஙகா விளையாடுமிடஙகள் மற்றும் திறவிடஙகள் அறிவிப்பு செய்ய அஙகீகாரத்திற்காக.

| | Name of the park | Location survey No | Extent in Areas | Owner ship | Existing usage and condition | Accessibility |
|---|---|---|---|---|---|---|
| 1 | Sarakal villai Lay out | L6/18-7(pt) | 585.$m^2$ | Nagercoil Municipality | park | Easily Accessible |
| 2 | Suriya Nagar | M6/2/2, 2/3 | 1380 $m^2$ | “ | park | “ |
| 3 | Thiruvalluvar park | P-1/149 (pt) | 566.76 $m^2$ | “ | park | “ |
| 4 | Arul Nagar | G-6/3-17 | 306.60 $m^2$ | “ | park | “ |
| **Play Field** | | | | | | |
| 1 | Simon Nagar | H-3/15-5,6 | 2396.20$m^2$ | Kanyakumari Co-operative House Construction Limited Vakaiku Nambakar Lurthamma Simon | Play field | “ |
| 2 | Nesavalar colony | G-5/9-50 | 1474.60 $m^2$ | Vadasery Handloon Nesavalar Co-operative colony president A. Ramaswamy | “ | “ |
| **Open Space** | | | | | | |
| 1 | Iswarya Park K.P.Road | G3/15/5 | 527.64 $m^2$ | Nagercoil Municipality | Open Space | Easily Accessible |
| 2 | Vadaku Rathaveethi | D3/3-8,9,10 | 571 $m^2$ | “ | “ | “ |
| 3 | Simon Nagar | H-3/24-1 | 1768.00 $m^2$ | Kanyakumari Co-operative | “ | “ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | House Construction Limited Vakaiku Nambakar Lurthamma Simon | | |
| 4 | Atharavattor kapakam | N4/13-2 | 34602.00 $m^2$ | Atharavattor Kapakam maintained by Nagercoil Municipality | " | " |

கோப்பு எண். 7953/1993/எப்1

**தீர்மானம் எண்: 591 – அங்கீகரிக்கப்பட்டது**

30. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை(நிலை) எண்:92, நாள்: 03.07.2007–ன் படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15% வீதம் வாடகை உயர்வு செய்யப்படவேண்டும் என்பதுடன், ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் தான் அங்காடி மதிப்பு நிர்ணயம் செய்திட நடவடிக்கை தொடர்ந்திடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், மேற்படி அரசாணையில் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு முரணாக கீழ்கண்ட வணிக வளாகங்களில் உள்ள கடைகளுக்கு அதன் எதிரே கண்ட தீர்மானங்கள் படி 01.04.2015–ல் அங்காடி மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ.எண் | வணிக வளாகம் விபரம் | ந.ம.தீ.எண் / நாள் | நகராட்சிக்கு (ஆண்டிற்கு) ஏற்படும் இழப்பு ரூ |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | வடசேரி நயினார் வணிக வளாகம் | 398/19.02.2016 | 6,91,839/– |
| 2 | வடசேரி சந்தை முன்புற கடைகள் | 399/19.02.2016 | 12,97,200/– |
| 3 | மீன்சந்தை முன்புற கடைகள் | 400/19.02.2016 | 50,016/– |
| 4 | பேருந்து நிலைய அரசு நிறுவனங்கள் | 401/19.02.2016 | 43,296/– |
| 5 | மீட் தெரு கடைகள் | 402/19.02.2016 | – |
| 6 | அண்ணா பேருந்து நிலைய கடைகள் | 403/19.02.2016 | 14,39,352/– |
| 7 | பெதஸ்தா வணிக வளாக கடைகள் | 404/19.02.2016 | 7,35,996/– |
| 8 | சரலூர் வணிக வளாக கடைகள் | 405/19.02.2016 | – |

| | | | |
|---|---|---|---|
| | | மொத்தம் | **42,57,696/–** |

மேற்படி தீர்மானங்களை செயல்படுத்திடும் நிலையில் நகராட்சிக்கு ஆண்டிற்கு ரூ.**42,57,696/–** நிதி இழப்பு ஏற்படுவதுடன் மூன்றாண்டு கால தொகுப்பு அளவிற்கு ரூ.**1,27,73,088/–**ம் நிதி இழப்பும் ஏற்படும். மேலும் மேற்படி நடவடிக்கை பெரும் தொடர் நிதியிழப்பை ஏற்படுத்துவதுடன், பல்வேறு நடைமுறை / சட்ட சிக்கல்களும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

எனவே, மேற்படி பொருள் தொடர்பாக விரைவாக முடிவு செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மேற்படி நிதி இழப்பிற்கு காரணமாக அப்போதைய நகர்மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரிசை எண் 1 முதல் 8 வரை கண்ட தீர்மானங்களை ரத்து செய்திடவும் உண்மை அங்காடி மதிப்பினை பெறும் பொருட்டு பொது ஏலம் நடத்திடவும், தீர்மானங்களை ரத்து செய்திட அரசிற்கு கருத்துரு அனுப்பிடவும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.7841/2017/அ13

**தீர்மானம் எண்: 592 – அங்கீகரிக்கப்பட்டது**

31. நாகர்கோவில் நகராட்சி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது நகராட்சி நிர்வாகத்தின் கடைமையாகும். உள்ளூர் மக்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களின் தேவைகள் போன்றவற்றை சிறந்த நிதி நிர்வாகத்தின் மூலமே செம்மையாக செயல்படுத்த முடியும். நகராட்சியின் வரவினங்களை பொறுத்து செலவினங்கள் அமையும். வரவினங்களையும், வரவுகளையும் பெருக்குவதன் மூலம் உள்ளூர் மக்களின்வசதிகளை மேம்படுத்தலாம். வரவினங்களில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் குத்தகை இனங்கள் போன்றவை அடங்கும்.

பூவிலிருந்து வண்டுதேனை எடுப்பதுபோல் பொதுமக்கள் வரியினங்கள் செலுத்துவதற்கு சுமை ஏற்படாமல், நகராட்சியின் வருவாயை பெருக்குவது சிறந்த நிதி நிர்வாகம் ஆகும். இந்நிலையில் சொத்துவரி உயர்த்தி கூடுதல் வருவாயை பெருக்க முற்பட்டால் வரிச்சுமை தாளாமல் பொதுமக்கள் மத்தியில் நகராட்சி நிர்வாகத்தின் மீது அதிருப்தி ஏற்படும். எனவே, குத்தகை இனங்களில் குத்தகை உரிமத்தின் மூலமாக நிதி ஆதாரத்தை பெருக்குவது சரியானது ஆகும். ஏனெனில் குத்தகை உரிமம் என்பது தேவை மற்றும் வெளிப்படை தன்மையின் காரணமாக எவருக்கும் பாதிப்பு இல்லாமல் வருவாயை பெருக்கும் ஒரு சிறந்த வழியாகும். எனவே, நகராட்சி நிர்வாகத்தை செம்மையாக நடத்துவதற்கும் சிறப்பாக நிர்வாகத்தை கொண்டு செல்வதற்கும் குத்தகை உரிமங்களின் மூலம் சரியான, நியாயமான வருவாயை ஈட்டும் பொருட்டு தற்போது நகராட்சி நிர்வாகம் பொதுஏலம் முறையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் முதல் கட்டமாக ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக குத்தகை உரிம இனங்களை சந்தை மதிப்பிற்கு இணையாக உரிமம் பெரும் பொருட்டு (வாடகை) அரசு ஆணைகளுக்கு இணஙக பொது ஏலம் விடுவது நகராட்சிக்கு இலாபகரமாக அமையும்.

இந்நிலையில் நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி கடைகள் பெரும்பாலானவை **1983**ம் ஆண்டிலிருந்து தனிநபர்களே குறைந்த உரிமத் தொகையில் அனுபவித்து வருகின்றனர். **2000–**ம் ஆண்டு அரசாணை எண்.**147** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை நாள்: **30.12.2000–** ன் படி வாடகை உயர்த்தி மூன்றாண்டுகளுக்கு மீண்டும் உரிமம் வழஙகப்பட்டது.

மேலும் 2007ம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை, நாள்.03.07.2007 அரசாணை நிலை எண்.92 வெளியிடப்பட்டது. அதற்கு பின்பு கடைகளுக்கு அன்றைய சந்தை மதிப்பில் வாடகை மறு மதிப்பீடு செய்யப்படவில்லை. ஏறத்தாழ 25 ஆண்டுகளாக தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15% மட்டுமே உயர்வு செய்து இன்று வரை குத்தகைதாரர்களால் வாடகை (மாத உரிமத் தொகை) செலுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட அரசாணை தொடர்ந்து மூன்று ஆண்டு தொகுப்பு கால அளவாக கொண்டு மூன்று முறை மட்டுமே புதுப்பிக்க வேண்டும். எனவே, தற்போதைய வாடகையானது 1983, 1987 ஆம் ஆண்டு சந்தை மதிப்பின் படி நிர்ணயம் செய்யப்பட்டது ஆகும். இது 9 ஆண்டுகள் முடிந்தவுடன் காலாவதியாகி விட்டது. எனவே, தற்பொழுது சந்தை மதிப்பில் வாடகை மதிப்பீடு செய்வது அல்லது பொது ஏலம் நடத்தி நியாயமான முறையில் அரசுக்கு சொந்தமான நகராட்சி கடைகளுக்கு உண்மையான மதிப்பை பெற வேண்டியுள்ளது.

குத்தகை உரிமம் காலவரையறைக்குட்பட்டது. குத்தகையை ஒருவரே தொடர்ந்து அனுபவிப்பது தவறு. குத்தகைதாரர்களால் தொடர்ந்து ஒருவரே கடைகளை நடத்துவது குத்தகை விதிகளுக்கு முரண்பட்ட செயல் ஆகும். குத்தகைதாரர் 9 ஆண்டுகள் முடிவுற்றபின்பு உரிமதாரர்கள் கடையினை காலி செய்து விட வேண்டும். தஙகளது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என உரிமதாரர்கள் கூறுவது சட்டத்திற்கு புறம்பானது. தொடர்ந்து தனிநபரே கடையை அனுபவித்து வருவதன் மூலம் மற்றவர்களது சம வாய்ப்பை தட்டி பறிப்பதாகும். இது குடிமக்களின் அடிப்படை உரிமையை பாதிக்கும் செயலாகும். பொது சொத்து என்பது அனைவருக்கும் பொதுவானது. அனைவரும் பஙகேற்கும் வகையில் நியாயமான வெளிப்படையான முறையில் ஏலம் நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் சமூக பொருளாதார நீதி நிலை நாட்டப்படும். அரசின் வருவாயை பெருக்க போட்டி நிறைந்த சூழ்நிலையில் பொது ஏலம் நடத்துவது சரியானதாகும் தாராபுரம் நகராட்சி கடைகளை ஏலம் நடத்தப்பட வேண்டும் என சென்னையில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கில் தாராபுரம் நகராட்சிக்கு ஆதரவாக ஏலம் நடத்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

கடை உரிமதாரர்கள் அதிகபட்சமாக அண்ணா பேருந்து நிலைய உட்புற கடைகளுக்கு அதிகபட்ச மாத வாடகை ரூ. 12797/—ம் குறைந்த பட்சமாக 1648/—ம் வெளிப்புறக் கடைகளில் அதிகபட்சமாக ஒரு கடைக்கு ரூ.7200/—ம் குறைந்த பட்சமாக ரூ.345/—ம் மேலும் வடசேரி பேருந்து நிலையத்தில் அதிகபட்ச மாத வாடகை ரூ.17848/—ம் குறைந்தபட்ச மாத வாடகை ரூ.4777/—ம் செலுத்தி வருகிறார்கள். மேலும் இதர வணிக வளாகஙகளில் இதனை விட குறைவான வாடகை தான் உள்ளது. மேலும் தற்போது புதிதாக ஏல நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட ஆம்னி பேருந்து நிலைய கடை / டிக்கட் முன் பதிவு அறை தற்போது மாத வாடகை ரூ.33500/—க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது. மேலும் மிக குறைந்த வாடகையில் பல ஆண்டுகளாக கடை நடத்தி வருவதால் இதனால் நகராட்சிக்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டு வருகின்றது . இதனை தற்போது பொது ஏலம் மூலம் விடப்பட்டால் மட்டுமே அதிக வருவாய் ஈட்ட வழிவகை ஏற்படும்.

இதில் ஏனைய கடைகள் உள்குத்தகைக்கும் மற்றும் பிறருக்கு விற்பனையும் செய்யப்பட்டுள்ளது. இதனால் நகராட்சி கடைகளை முறைகேடாகவும் சட்ட விரோதமாகவும் பயன்படுத்தி வருகின்றார்கள். இதனால் நகராட்சிக்கு இழப்பீடு அதிக அளவில் ஏற்படுத்தி வருகின்றார்கள்.

மேலும் நாகர்கோவில் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகளுக்கு செலுத்த வேண்டிய நகராட்சி பஙகு தொகை ரூ 1679.01 இலட்சம் மற்றும் நகராட்சியின்

தற்போதைய கடன் ரூ.1115.44 லட்சம் மற்றும் நகராட்சியில் பட்டியல் வழஙகப்படவேண்டிய பணிகள் மின்வாரிய நிலுவை மற்றும் நிர்வாக செலவு ரூ.2550.61 லட்சம் மேற்படி ரூ.5345.06 லட்சம் நிதி திரட்டிட வேறு எவ்வித சாத்திய கூறுகளும் இல்லை.

<u>நகராட்சி பஙகு தொகை குறித்த விபரம்</u>

| வ, எண் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு ரூ.லட்சத்தில் | நகராட்சி பஙகு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | பாதாள சாக்கடை திட்டம் | 7604.48 | 855.65 |
| 2 | Urban Health Mission | 100.00 | 16.00 |
| 3 | அம்மா உணவகம் | - | 50.00 |
| 4 | Gasifire Crematorium | - | 100.00 |
| 5 | BIO GAS | 25.00 | 14.00 |
| 6 | Namma toilet | 45.00 | - |
| 7 | Park Amruth | 198.05 | 59.41 |
| 8 | சிறப்பு சாலைத் திட்டம் | 800.00 | 400.00 |
| 9 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 635.80 | 158.95 |
| 10 | இடைவெளி நிரப்புதல் | 125.00 | 25.00 |
| | | | **1679.01 லட்சம்** |

<u>நகராட்சி கடன் விபரஙகள்</u>

| வ, எண் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு | நகராட்சி பஙகு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | TUFIDCO | 484.70 | |
| 2 | HUDCO (W S) Loan | 630.74 | |
| | **Total** | **1115.44** | |

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியில் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு வழஙகப்பட வேண்டிய தொகை | 500.65 லட்சம் |
| 2 | மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை | 397.17 லட்சம் |
| 3 | நகராட்சி மொத்த வருவாயில் பணியாளர்களுக்கு வழஙகப்படும் ஊதியம், ஓய்வூதியம் உட்பட ஏற்படும் நிர்வாக செலவுகள் | 1652.79 லட்சம் |
| | **மொத்தம்** | **2550.61 லட்சம்** |

எனவே, இதனை கருத்தில் கொண்டு நகராட்சி வருவாயினை பெருக்க ஏலம் விடப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாகிய கடைகளின் உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் விட்டு வருவாயை பெருக்கலாம்.

| வ. எண் | வணிக வளாகம் விபரம் | மொத்தம் கடைகள் | தற்போது செலுத்தப்பட்டு வரப்படும் வருட வாடகை ரூ.லட்சத்தில் (ஆண்டிற்கு) | பொது ஏலம் விடும் பட்சத்தில் வரக்கூடிய வருட வருமானம் ரூ. லட்சத்தில் (ஆண்டிற்கு) | வித்தியாசம் ரூ. லட்சத்தில் (ஆண்டிற்கு) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | அண்ணா பேருந்து நிலைய பூ விற்பனை | 6 | 0.43 | 2.16 | 1.73 |
| 2. | அண்ணா பேருந்து நிலைய கட்டிட கடைகள் | 11 | 9.17 | 39.60 | 30.43 |
| 3. | வடசேரி சந்தை முன்புற கடைகள் | 18 | 2.99 | 43.20 | 40.21 |
| 4. | வடசேரி நயினார் கீழ் கடைகள் | 18 | 3.34 | 43.20 | 39.86 |
| 5. | நயினார் மேல்மாடி அறைகள் | 16 | 1.50 | 19.20 | 17.70 |
| 6. | பாலமோர் ரோடு கடைகள் | 3 | 1.63 | 9.00 | 7.37 |
| 7. | வடசேரி சந்தை முன்பக்க கடைகள் | 12 | 0.72 | 28.80 | 28.08 |
| 8. | அண்ணா பேருந்து நிலைய கடை | 3 | 1.41 | 10.80 | 9.39 |
| 9. | வடசேரி மீன் சந்தை முன் பக்க கடை | 6 | 3.00 | 14.40 | 11.40 |
| 10. | சரலூார் மாட்டு சந்தை வடக்கு பக்ககடை | 5 | 0.37 | 2.70 | 2.33 |
| 11. | சரலூார் மாட்டு சந்தை முன்பக்க கடை | 6 | 3.37 | 4.32 | 0.95 |
| 12. | அண்ணா பேருந்து நிலைய புதிய கடைகள் | 7 | 3.44 | 25.20 | 21.76 |
| 13. | காமராஜ் 5–மாடி கடைகள் | | | 24.00 | 11.69 |
| 14. | கோட்டார் சவேரியார் கோயில் முன் பக்க கடைகள் | 2 | 0.20 | 1.08 | 0.88 |
| 15. | வடிவீஸ்வரம் | 5 | 0.82 | 12.00 | 11.18 |
| 16. | கணேசபுரம் | 6 | 1.37 | 10.80 | 9.43 |
| 17. | மீட் தெரு | 15 | 3.60 | 27.00 | 23.40 |
| 18. | பெதஸ்தா | 47 | 9.13 | 67.68 | 58.55 |
| 19. | வடசேரி பேருந்து நிலைய கடைகள் | 20 | 21.45 | 84.00 | 62.55 |
| | **மொத்தம்** | **216** | **80.25** | **469.14** | **388.89** |

ஆக மொத்தம் தோராயமாக கூடுதல் வருமானம் ரூ.**388.89** லட்சம் ஆகும். மேலும் வருவாயை பெருக்கினால் மட்டுமே நகரம் வளர்ச்சி அடைவதற்கும் அடிப்படை

கட்டமைப்பு மேம்படுத்துவதற்கும், பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகள் செய்வதற்கும் ஏதுவாகும். மேலும் நமது நகராட்சி நிதிநிலைமை சீரடைந்தால் மட்டுமே உரிய பஙகு தொகை செலுத்தி மத்திய மாநில அரசுகளின் பல்வேறு திட்டஙகளை பெறவும் முடியும்.

பொது ஏலம் நடத்துவதால் தற்போதைய உரிமதாரர் பாதிக்கப்பட மாட்டார்கள். அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கும் என்பது சரியல்ல. ஏனெனில் தற்போதைய உரிமதாரருக்கு ஏலத்தில் பஙகு பெறலாம், பொதுமக்களும் பஙகு பெறலாம்.

வெளிநபர்கள் அதிக உரிமத் தொகைக்கு எடுத்துவிட்டு நகராட்சிக்கு இழப்பு ஏற்படத்துவார்கள் என்ற கூற்றும் சரியல்ல. ஏனெனில் உரிய முன் வைப்புத்தொகை பெற்றக்கொள்வதாலும், ஒப்பந்தபத்திரம் பெறப்படுவதாலும், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே வேண்டுமென்றே அதிக தொகைக்கு ஏலம் எடுத்து தஙகளுக்கு நஷ்டம் ஏற்படுத்திக் கொள்ள யாரும் முன்வர மாட்டார்கள்.

திடீரென்று ஏலம் கொண்டு வருவதன் மூலம் கடையை நடத்தி வருபவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் கடைக்காரர்கள் நகராட்சியின் மீது அதிருப்தி ஏற்படும் என்பதும் சரியல்ல. குத்தகை உரிமம் என்பது காலவரையறைக்கு உட்பட்டது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் உரிம காலம் முடிவுற்ற பின்பு தன்னயில்பாக கடையின் உரிமம் ரத்தாகிவிடும் தாஙகளாகவே கடையை காலி செய்து விடவேண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

ஏலம் நடத்துவதால் தற்போதுள்ள குத்தகை உரிமதாரர்களுக்கு வெறுப்பு ஏற்படலாம் ஆனால் பொதுமக்கள் மத்தியில் நகராட்சி நிர்வாகத்தின் நடவடிக்கை நன்மதிப்பை பெறும் அனைவருக்கும் சம வாய்ப்பும் ஏற்படும்.

நகராட்சி சொத்து பொது சொத்து, தனிநபர்களே தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள். பொது சொத்தை அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொது ஏலம் நடத்துவது என்பது அனைவரும் பயன்படும் வகையில் சம வாய்ப்பு ஏற்படும். சமூக பொருளாதார நீதி நிலை நாட்டப்படுவதுடன், நகராட்சியின் வருவாயை பெருக்கி பொதுமக்களின் அடிப்படை வசதி, அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள ஏதுவாக நகராட்சி கடைகளை மறு ஏலம் விட அஙகீகாரத்திற்காக.

கோப்பு எண். 7841/2017/அ13

**தீர்மானம் எண்: 593 – அஙகீகரிக்கப்பட்டது**

32 . நாகர்கோவில் நகராட்சி 2011–ம் ஆண்டு 4 ஊராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி இணைக்கப்பட்டு 49.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. நாகர்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து அதிகளவில் வழக்குகள் நாகர்கோவில் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. நாகர்கோவில் நகராட்சியில் நகராட்சி வழக்கறிஞராக திரு.S.நாகராஜன் – அவர்கள் நியமனம் செய்யப்பட்டு வழக்குகளில் ஆஜராகி நடத்தி வருகிறார்கள். நகராட்சியில் சொத்துவரி குறித்தும், சாலை பணிகள் குறித்தும், நகராட்சிக்கு சொந்தமான இடஙகள் குறித்து வழக்குகள் நடைபெற்று வருவதால் ஒரு வழக்கறிஞர் மட்டுமே மேற்படி வழக்குகளை நடத்த சிரமமாக உள்ளதால்

வழக்குகளின் முக்கியத்துவம் கருதி மூத்த வழக்கறிஞர் திரு.ஹரிஹரன் – அவர்களை கூடுதலாக நகர்மன்ற வழக்கறிஞராக நியமனம் செய்ய அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.7451/2017/எப்1

**தீர்மானம் எண்: 594 – அங்கீகரிக்கப்பட்டது**

33. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) No 4063, 4064, 4065/2016 ஆகிய வழக்குகள் திரு.V.தங்கராஜ், திருமதி.பெர்னீஷ்கீதா, திருமதி.V.பத்மா ஆகியோரால் நாகர்கோவில் நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண்.1017/2006/C1 நாள்.22.03.2006–ன் படி பணி வழங்க கேட்டு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் திரு.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் ஆஜராகவும், வழக்கிற்காகும் செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.1017/2006/சி1

**தீர்மானம் எண்: 595 – அங்கீகரிக்கப்பட்டது**